மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அங்கத்தினரின் இவ்வாலோசனை அரசினரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதேபோன்று, வடாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மாநிலத்தில் எங்கெல்லாம் சிறிய சிறிய அணைகளைக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் கட்டுவதன் மூலமாக, எதிர் காலத்தில் விவசாய அபிவிருத்தியும் உணவு உற்பத்திப் பெருக்கமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்குமே, அந்த முறையில் சிறிய சிறிய அணைகளை கட்டக்கூடிய சாத்தியம் உள்ள எல்லா இடங்களிலும் கட்டுவதற்கு தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போலவே அரசுக்கும் அந்த ஆசை இருக்கிறது. ஆனால், பாத்திரத்திலேதான் பண்டம் குறைவாக இருக்கிறது.

Bridges

*284 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the shaky condition of the bridge in the Nagercoil-Manavalakurichi road near Kannakurichi ;

(*b*) whether the Government have received memoranda from the public of Kannakurichi about the deplorable condition of this bridge ; and

(*c*) if so, when the work of reconstruction will be started ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) கண்ணக்குறிச்சி அருகில் நாகர்கோயில்-ராஜக்கமங்கலம் கொளச்சல் சாலையில் 7/6 மைலில் உள்ள கட்டுமான அமைப்பு ஒரு மதகாகும். அது பாலமன்று. அது நன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) மழைக்காலத்தில் இதன் கரையிலுள்ள அணுகுவழிகள் அரிக்கப்பட்டன ; பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி தல வட்டாரப் பொறியாளருக்கு முறையீடுகள் வந்துள்ளன.

(உ) மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டும் தழைச் செடிகள் வளர்ப்பதன் மூலமும் அணுகுவழிகள் தற்போதைக்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. ரூ. 4,700 மதிப்பீட்டுச் செலவில் தகுந்த தடுப்புச் சுவரும் பற்றுச் சுவரும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதகைப் புதுப்பிப்பதற்கு உடனடியான தேவை இல்லை.

திரு. ஏ. முனியாண்டி : பேரணையிலே கட்டப்பட்ட பாலம் போக்குவரத்துக்கு வசதியற்றதாக இருப்பதால், அதை போக்குவரத்துக்கு வசதியாகக் கட்ட அரசுக்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொடக்கக் கேள்வி கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தது.

*285 வினா.—**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆரணி தாலூக்காவில் குன்னத்தூர் to அய்யம்பாளையம் நெடுஞ்சாலையில் கீழ்நகர் அருகாமையில் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. இல. பலராமன் : ஆரணி தாலூக்காவில், கீழ்நகர் அருகாமையில் நாக நதியில் தண்ணீர் வரும்போது 15—20 மைல் தூரம் சுற்றிவர வேண்டி இருப்பதால், இதை அரசாங்கம் பரிசீலித்து, நாக நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதுகுறித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு மாநில நெடுஞ்சாலைகள் என்கிற தலைப்பின் கீழ், 6,30,000 ரூபாய் செலவிடவேண்டும் என்ற திட்டம் இடப்பட்டிருக்கிறது. ஆனால், அது செலவிடப்படுவதற்கு நிதி நிலைமை இன்று அரசாங்கத்திடம் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 23 கோடி ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது. அதிலேகூட இந்தத் திட்டம் இப்பொழுது வருவதற்கில்லை. போகப் போகத்தான் இதுபற்றி யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பனை வெல்லத்தின் விலை.

*286 வினா.—திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கருப்புக்கட்டியின் விலை திடீர் திடீரென உயருவது (Fluctuation) அரசினரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) இனிப்பு வகையான சீனி, வெல்லம், கருப்புக்கட்டி ஆகிய மூன்றில் சீனி, வெல்லம் முதலியவற்றிற்கு விலைக் கட்டுப்பாடு இருப்பதும் கருப்புக்கட்டிக்கு ஒருவிதமான கட்டுப்பாடும் இல்லாததும்தான் கருப்புக் கட்டி விலை ஏற்றத்துக்கு காரணம் என்று அரசு கருதுகிறதா ?

(உ) ஆம் எனில், கருப்புக்கட்டியையும் விலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வகையில் அதற்கான ஆணையினைப் பிறப்பிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 10—12—1967 அளவில் திருநெல்வேலி மாவட்டத்தில் பனை வெல்லத்தின் விலை திடீரென அதிகரித்தது. இதைத் தவிர, பனைவெல்ல விலையில் அடிக்கடி ஏற்றத் தாழ்வு எதும் ஏற்படவில்லை.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : திருநெல்வேலி மாவட்டத்தில் பனைவெல்லத்தின் விலை திடீரென்று ஏறக் காரணம், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கவில்லை என்பதா ? அல்லது, இப்பொழுது சர்க்கரை அதிகமாகக் கிடைத்து விலையும் அதிகமாக இருப்பதால், அதே நிலையில்தான் இன்னும் பனை வெல்லத்தின் விலை இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மை தானா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதல் காரணம் உண்மை அல்ல. இரண்டாவது காரணமும் உண்மை அல்ல. குறிப்பிட்ட 10—12—1967 வாக்கில், திருநெல்வேலி மாவட்டத்தில் பனைவெல்லத்தினுடைய விலை உயர்ந்தது. 8—12—1967 அன்று அங்கிருந்த விலையை விட திடீரென்று உயர்ந்தது. அதற்குக் காரணம், டிசம்பர் மாதம் அங்கே ஆஃப் ஸீஸன் ஆகும். அந்த நேரத்தில் வழக்கமாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்துதான் பனைவெல்லத்தை அவர்கள் பெறுவது வழக்கம் அந்த சமயத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாங்கனி